**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பண்ருட்டி.**

**முதலேற்பு வழக்கு எண். 105/2019**

**2026 ம் ஆண்டு மார்ச்-26 ம் நாள் வியாழன்கிழமை**

பெயர் : ஆதிமூலம்

சாட்சி : DW1

தந்தை பெயர் : கந்தசாமி

நேரம் : 12.05 P.M to 1.05PM

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கடந்த 07.01.2008 ல் எனக்கும் எனது சகோதரர் மற்றும் எனது சகோதரரின் மகனான மகாவிஷ்னு என்பவருக்கும் இடையே பாக பிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தியும் மகாவிஷ்னுவும் குடுமியான்குப்பத்தில் தான் இருக்கிறார்கள். நான் மற்ற சகோதரர் மகன்களுக்காக சேர்த்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள நிலையில் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அனுமதி பெற்றேனா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. என் குடும்பம், கிருஷ்ணமூர்த்தி குடும்பமும் மகாவிஷ்னு குடும்பமும் தனித்தனியாக தான் உள்ளது என்றால் சரிதான். எங்கள் மூவர் குடும்பத்திற்கும் தனித்தனியாக தான் குடும்ப அட்டை உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கை குடும்ப மேலாளர் என்ற முறையில் எனக்கு இந்த வழக்கை தாக்கல் செய்ய உரிமை இல்லை என்றால் சரியல்ல. சொத்தை நான் தான் பாகம் பிரித்து கொடுத்ததாலும் பிரதிவாதி தற்போது பிரச்சினை செய்வதால் நான் குடும்ப மேலாளராக வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2. வா.சா.ஆ.48 ன்படி பாகம் பிரித்து கொடுக்கப்பட்ட சொத்தில் நான் மற்றும் எனது சகோதரர் கிருஷ்ணமூர்த்தி மற்றொரு சகோதரர் மகனான மகாவிஷ்னு அவர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வசித்து வருகிறார்கள். நான் எனக்காக மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்யமுடியும் என்றாலும் மூன்றாம் நபருக்காகவோ அல்லது எனது சகோதரர்களுக்காகவோ வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நான் தான் கிரையம் வாங்கி கொடுத்தேன். அதில் வீடு கட்டும் போது பிரதிவாதி பிரச்சினை செய்ததாலும் நான் தான் சொத்தை கிரையம் மற்றும் பாகம் செய்து கொடுத்தாலும் நான் எனது குடும்பத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது சகோதரர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் எனது சகோதரர் மகன் மகாவிஷ்னுவிற்கு நான் குடும்ப மேலாளர் அல்ல என்றாலும் நான் தான் குடும்ப

மேலாளர் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. எனது சகோதரர்களை நான் தான் சிறு வயதில் இருந்தே நான் தான் பார்த்து கொண்டேன் அந்த அடிப்படையில் தான் வழக்கு தாக்கல் செய்தேன். பாக பிரிவினை ஏற்பட்டுவிட்டதால் நான் குடும்ப மேலாளர் என்ற தகுதி எனக்கு வராது என்றால் சரியல்ல. பாக பிரிவினை செய்யப்பட்டுவிட்டதால் எனது சகோதரர்காகவும் எனது சகோதரர் மகனுக்காவும் போடப்பட்ட வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது சகோதரர் மற்றும் எனது சகோதரர் மகனை சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

3. நான் 1997 ல் சொத்தை வாங்கும் போது வில்லங்கம் பார்த்து தான் கிரையம் வாங்கினேன். எத்தனை வருடத்திற்கு வில்லங்கம் பார்த்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. வில்லங்க சான்றிதழை நான் பார்த்து வாங்கியிருந்தால் பிரதிவாதி பத்ரிநாதனின் தந்தை விஜயராகவன் பவுனாம்பாளிடமிருந்து 01.12.1969 ம் வருடம் தான செட்டில்மெண்ட பெறப்பட்ட விவரம் எனக்கு தெரிந்து இருக்குமென்றால் நான் வில்லங்க சான்றிதழை பார்க்கும் போது மேற்படி தான செட்டில் மெண்ட் விவரம் இல்லை. நான் சொல்வது போல் வில்லங்க சான்றிதழை பார்க்கவில்லை இல்லை என்றாலும் விஜயராகவன் பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் பற்றி எனக்கு தெரிந்து இருக்கும் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்து 12 செண்ட் ஆகும். 12 செண்டில் 9 செண்ட் கொண்டாரெட்டியுடையது. மீதமுள்ள 3 செண்ட் பிரதிவாதியின் தந்தையுடையது. 9 செண்ட் கொண்டாரெட்டி நீதிமன்றத்திலிடமிருந்து உத்தரவு பெற்று வாங்கிய சொத்து ஆகும். கொண்டாரெட்டிக்கு உரிமையே இல்லை என்றாலும் விஜயராகவன் என்பவருக்கு தான் பாத்தியப்பட்டது என்றாலும் விஜயராகவன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரிந்திருந்ததாலும் நான் கொண்டாரெட்டியிடம் சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. கொண்டாரெட்டி நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் தான் அவருக்கு சொத்து பாத்தியப்பட்டது. அதற்கு உண்டான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

4. நான், கொண்டாரெட்டி நீதிமன்றத்தின் மூலம் பெறப்பட்ட உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் கிரையம் பெற்ற ஆவணத்தில் நீதிமன்றத்தின் உத்தரவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. நான் மேற்படி விவரங்களை எனது வழக்குரை மற்றும் பிராமாண வாக்குமூலத்தில்

குறிப்பிடப்பட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. நான் சரியான நபரிடம் சொத்தை கிரையம் பெறவில்லை என்றாலும் அதனால் தான் நீதிமன்ற உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியான நபரிடமிருந்து கிரையம் பெறாததால் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றாலும் சரியல்ல. ஆவணம் என்னிடம் இல்லை. நான் பலமுறை கொண்டாரெட்டியிடம் கேட்டும் தரவில்லை. நான் உண்மையாக கிரையம் பெற்றிருந்தால் மூல ஆவணத்தை பெற்றுதான் கிரையம் வாங்கியிருப்பேன். மூல ஆவணத்தை பெறாமல் கிரையம் செய்தது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

5. கடந்த 01.12.1969 ல் பவுனம்மாள் என்பவர் விஜராாகவனுக்கு தான செட்டில்மெண்ட் செய்த விவரம் எனக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லப்படும் கொண்டாரெட்டிக்கே விவரம் தெரியும் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. எனக்கு தற்போது வயது 80 ஆகும். கடந்த 01.12.1969 ல் பவுனம்மாள் என்பவர் விஜராாகவனுக்கு தான செட்டில்மெண்ட் செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எனக்கு தெரியாது. பவுனம்மாள் விஜயராகவனுக்கு கொடுத்த தான செட்டில்மெண்ட் நடைமுறைக்கு வந்து விஜயராகவன் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. நான் தான் அனுபவித்து வருகிறேன். எனக்கு முன்பாக கொண்டாரெட்டி அனுபவித்து வந்தார். நான் தான் அனுபவித்து வருகிறேன். எனக்கு முன்பாக கொண்டாரெட்டி அனுபவித்து வந்தார் என்பது தவறு என்றால் சரியல்ல இன்றைய தேதி வரை நான் தான் அனுபவித்தில் உள்ளேன்.

6. விஜயராகவன் தான செட்டில்மெண்ட் மூலம் பெறப்பட்ட சொத்தை அவர் அனுபவித்து வந்த பிறகு அவருடைய மகனான பத்ரிநாராயணன் மற்றும் அவருடைய தாயார் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் விஜயராகவன் வாரிசுதாரர்களான பத்மா மற்றும் ஜெயந்தியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**